# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

**எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032**

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

*************

முறையீட்டு மனு எண் : 0015 / 2017 / ந

ஆணை எண் :126 / 2017

நாள் :20/05/2017

| | | |
|---|---|---|
| 25.01.2017 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தி | – | இம்முறை மன்ற நடுவத்தால் தாமாகவே முன்வந்து முறையீடாக பதிவு செய்யப்பட்டது. |
| நகராட்சி ஆணையர், திருத்தணி நகராட்சி. | – | எதிர் மனுதாரர். |

## ஆணை

25.01.2017 நாளிட்ட "தினமலர்" நாளிதழில் "கடைகள் ஏலம் விடுவதில் தாமதம்-நகராட்சிக்கு வருவாய் இழப்பு" எனும் தலைப்பில் வெளிவந்த செய்தியின் அடிப்படையில், 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சட்டப் பிரிவு 7ன் படி, இம்முறை மன்ற நடுவம் தாமாகவே முன்வந்து முறையீடாகப் பதிவு செய்து விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அதன்படி அறிவிப்பாணை அசல் மனு எண்:0015/2017/ந நாள்:30.01.2017ல், இப்பொருள் குறித்து அறிக்கை அனுப்புமாறு திருத்தணி நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதற்கிணங்க நகராட்சி ஆணையாது அறிக்கை நக.எண்.1309/16/அ1 நாள்:07.02.2017 வரப்பெற்றது. அதில் கீழ்க்கண்டவாறான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

"இந்நகராட்சிக்கு சொந்தமான சன்னதி தெருவில் பொது நிதியின் கீழ் கட்டப்பட்ட புதிய கடைகள் 14 எண்ணிக்கைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நகர்மன்ற தீர்மானம் 22 நாள் : 30.11.2016 அனுமதி பெற்று மாத வாடகை நிர்ணயம் செய்யவும் மற்றும் பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களுக்கு அனுமதி

வழங்கக் கோரி இவ்வலுவலக ந.க.எண்:1309/16/அ1 நாள்:19.01.2017 – ல் கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது." என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மேட்டுத்தெருவில் கட்டப்பட்டுள்ள 6 கடைகளின் வாடகை நிர்ணயம் செய்யும் பணி முடிவுற்றவுடன், மன்ற அனுமதி பெற்று பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், இதில் ஏலம் விடுவதில் தாமதம் ஏதும் இல்லையெனவும் இதனால், நகராட்சியில் வருவாய் இழப்பு ஏதுமில்லை–— என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை மன்ற நடுவ அழைப்பாணை எண்:0015/17/ந நாள்:06.03.2017ல், 17.04.2017 அன்று இம்முறை மன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி விளக்கங்களை சமர்ப்பிக்குமாறு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி நகராட்சி ஆணையர் திரு.S.முருகேசன் ஆஜராகி கீழ்க்கண்டவாறான தனது விளக்கங்களை சமர்ப்பித்தார்.

"இப்பொருள் குறித்து 07.02.2017 நாளிட்ட அறிக்கை என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பத்திரிக்கைச் செய்தியில் வந்த மேட்டுத் தெருவில் மொத்தம் 6 கடைகள் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. வணிக வளாகம் கட்டுவதற்கு மன்ற அனுமதி பெற்றது, ஒப்பந்தப் புள்ளி, திட்ட மதிப்பீடு, ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்தது பணியாணை வழங்கியது, பணி துவங்கிய நாள் விவரங்கள் அடுத்த விசாரணையில் சமர்ப்பிக்கப்படும்," என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கால அவகாசம் வழங்கி விசாரணை 03.05.2017 க்கு இம்முறை மன்ற நடுவத்தால் ஒத்திவைக்கப்பட்டது. உரிய அழைப்பாணை எண்:0015/2017/ந நாள்:18.04.2017ல் வழங்கப்பட்டது. அதற்கிணங்க 03.05.2017 அன்று திருத்தணி நகராட்சி ஆணையர் நேரில் ஆஜராகி கீழ்காணும் விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

"திருத்தணி நகராட்சியில் 13-வது வார்டில் உள்ள சன்னதி தெருவில் 14 கடைகள் கட்டி முடிக்கப்பட்டு ஏலம் விடுவதற்காக 28.04.2017ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டுவிட்டது. 31.05.2017 இறுதி செய்யப்பட்டு விதி முறைகளின்படி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேட்டுத் தெருவில் 6 கடைகள் கட்டி முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ஒரு மாத காலத்திற்குள் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, வாடகை விடப்படும் எனத் தெரிவித்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரிய அறிவிப்பு நகலினையும் முறைமன்ற நடுவ பரிசீலனைக்கு நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆவணங்களைப் பரிசீலித்ததில் இம்முறை மன்ற நடுவ நடவடிக்கைகளுக்குப் பின்னர் நகராட்சி கடைகள் ஏல ஒப்பந்தப்புள்ளிகள் அறிவிப்பு வெளியிடப்பட்டு (03.05.2017) நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது.

இருப்பினும், வருவாய் தாக்கக்க இனங்களான வணிக வளாகங்கள் போன்றவை உள்ளாட்சி அமைப்புகளில் கட்டப்படும்போது அவை கட்டப்படுவதற்கு முன்பே 75% இனங்களை

கண்டிப்பாக முன் ஏலம் விடப்பட்ட பின்பே கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவேண்டுமென அரசாணை 2 (D) எண்:222 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:26.11.2007 ல் ஆணையிடப்பட்டுள்ளதையும், மேலும், அவ்வாறு முன் ஏலம் விடுவதன் மூலம், நகராட்சியால் கட்டப்படும் அங்காடி கட்டிடங்கள் காலியாகவே உள்ளது தவிர்க்கப்படலாமென்பதும் இம்முறை மன்ற நடுவ விசாரணையின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில் அங்காடிகள் கட்டப்பட்டபின்பு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு கருத்துரு அனுப்பி ஒப்புதல் கோரப்படும் நிலை தாமதத்தை ஏற்படுத்துவதாக அமைகிறதென கருதப்படுகிறது.

எனவே, இப்பொருள் குறித்து தக்க ஆணைகள் வழங்கிடவும், நகராட்சியால் கட்டப்பட்டுள்ள அங்காடிகளை விரைவில் ஏலம் விட்டு நகராட்சிக்கு வருவாய் வரத்தக்க வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையருக்கு தக்க உத்தரவுகளை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் வழங்கக் கேட்டுக்கொண்டு அவ்வாறே இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017 ஆம் ஆண்டு மே திங்கள் 20 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஓம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
எழிலகம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

2. நகராட்சி ஆணையர்,
திருத்தணி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரகம்,
செங்கற்பட்டு மண்டலம்.